**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.</u>**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

திருவள்ளுவராண்டு 2055 பராபவ வருடம், ஆனி மாதம் 08 –ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22–ஆம் நாள் திங்கள்கிழமை

<u>பழைய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 71/2022</u>

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 257/2025</u>

**<u>CN0R.NO. TNKR11-000928-2025</u>**

தமிழக அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
லாலாபேட்டை காவல் நிலையம்,
குற்ற எண்.646/2020
சட்டபிரிவு : 294(b), 324, 506(ii), 326 IPC --- புகார்தாரர்

// **எதிர்**//

A1 – சின்னசாமி, வயது 55,
த/பெ.பெத்துரெட்டியார்,
அந்தரப்பட்டி, சிந்தலவாடி கிராமம்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம்.

A2 - சுப்புராமன், வயது 65,
த/பெ.பெத்துரெட்டியார்,
அந்தரப்பட்டி, சிந்தலவாடி கிராமம்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம்.

A3 – அமுதா, வயது 45,
த/பெ.சின்னசாமி,
அந்தரப்பட்டி, சிந்தலவாடி கிராமம்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம். --- குற்றம்சாட்டப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram |
| 2. | Name of the Judge | Thiru.R.Bagyaraj, B.A., B.L., |
| 3. | Date of Judgment | 22.06.2026 |

| | | |
|---|---|---|
| 4. | Case Number along with CNR Number | CC 257/2025,<br>CNR No.TNKR11-000978-2025 |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police<br>Lalapet P.S.<br>/Vs/<br>**A1 – சின்னசாமி**<br>A2 - **சுப்புராமன்**<br>A3 – **அமுதா** |
| 6. | Date of Occurrence | 03.12.2020 |
| 7. | Date of Complaint | 03.12.2020 |
| 8. | Date of Arrest if any and Remand | A1 to A3 - 22.12.2020 |
| 9. | Period of remand of the accused | A1 to A3 – 22.12.2020 - 05.01.2021 |
| 10. | Date of Release on bail | A1 to A3 – 05.01.2021 |
| 11. | Date of Final report | 18.02.2021 |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil |
| 13. | Date of questioning of the accused U/s. 240 of Code of Criminal Procedure | 29.08.2022 |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | (see table below) |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil |
| 16. | Date of examination of the accused U/s. 313 of the Code | 16.06.2026 |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil |

| No. of. Witness | Chief | Cross |
|---|---|---|
| PW-1 | 16.02.2026 | - |
| PW-2 | 16.02.2026 | - |
| PW-3 | 16.02.2026 | - |
| PW-4 | 24.03.2026 | - |
| PW-5 | 19.05.2026 | - |
| PW-6 | 02.06.2026 | - |
| PW-7 | 02.06.2026 | - |
| PW-8 | 10.06.2026 | 10.06.2026 |

| | | |
|---|---|---|
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil |
| 19. | Date of Commencement of Trial | 16.02.2026 |
| 20. | Date of closure of Trial | 10.06.2026 |
| 21. | Date of Sentence or order | 22.06.2026 |
| 22. | Date of service of copy of judgment to the accused | Nil |
| 23. | If any delay, give explanation | No |

இவ்வழக்கானது கடந்த 19.07.2022 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 16.06.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 திருமதி.S.பெரியமறத்தி அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், 1 முதல் 3 எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பாலாஜி B.A.,B.L., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 22.06.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும், தீர்ப்புரை

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர், லாலாபேட்டை கா. நி. கு. எண். 646/2020 |
| எதிரிகளின் பெயர் | A1 – சின்னசாமி, வயது 55,<br>த/பெ.பெத்துரெட்டியார்,<br>அந்தரப்பட்டி, சிந்தலவாடி கிராமம்,<br>கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம்.<br><br>A2 - சுப்புராமன், வயது 65,<br>த/பெ.பெத்துரெட்டியார்,<br>அந்தரப்பட்டி, சிந்தலவாடி கிராமம்,<br>கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம்.<br><br>A3 – அமுதா, வயது 45,<br>த/பெ.சின்னசாமி, |

| | |
|---|---|
| | அந்தரப்பட்டி, சிந்தலவாடி கிராமம், கிருஷ்ணராயபுரம் தாலுக்கா, கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 294(b), 324, 506(ii), 326 IPC |
| நீதிமன்றத்தால் 1 முதல் 3 எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 294(b), 324, 506(ii), 326 IPC |
| எதிரிகளின் பதில் | குற்றவாளிகள் அல்ல |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளிகள் அல்ல |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | திருமதி.S. பெரியமறத்தி |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.M.பாலாஜி B.A.,B.L., |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 16.06.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 22.06.2026 |

## தீர்ப்புரை

இவ்வழக்கானது லாலாபேட்டை காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173 – இன் கீழ் 03.12.2020 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(b), 324, 506(ii), 326 IPC ன் கீழான குற்றத்திற்காக குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.71/2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றம் 2021ம் ஆண்டு புதியதாக ஆரம்பிக்கப்பட்டதால் காவல்நிலைய எல்லை நிலவரையரை அடிப்படையில் மாண்புமிகு கரூர் தலைமை குற்றவியல் நீதிமன்ற ROC.No. 19/2024/A1, 30.09.2025 என்ற உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்ற சி.சி.எண்.257/2025 ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்காகும்.

## இறுதியறிக்கையின் சுருக்கம்:

வாதி தரப்பும், எதிரி தரப்பும் பங்காளிகள் ஆவார்கள். இருவருக்கும் ஏற்கனவே நிலம் பங்கு பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வருகிறது. இந்த நிலையில் எதிரிகள் குடும்பத்தார் புகார்தாரர் மற்றும் சாட்சிகளுக்கு சொந்தமான பாத்தியப்பட்ட நிலத்து வழியாக அவர்கள் வீட்டுக்கு சென்று

வந்தார்கள். அது மட்டுமின்றி அந்த பாதைக்கு வேலி அமைத்து புகார்தாரர் நிலத்தை குழாய் அமைக்க வாணி பறித்தபொழுது புகார்தாரர் மற்றும் சாட்சிகள் சென்று எதுக்காக எங்க நிலத்தில் வாணி பறிக்கிறீங்க பறிக்க கூடாதுன்னு தேக்கியதால் எதிரி சின்னசாமி புகார்தாரர் வீட்டுக்கு போற பாதையை சீத்தமுள்ளை போட்டு அடைத்துவிட்டதால் 03.12.2020 ம் தேதி காலை 10.30 மணியளவில் புகார்தாரர் கார்த்திக் சாட்சி –2 ராணி, சாட்சி –3 வாசு, சாட்சி –4 சிவக்குமார், சாட்சி – 5 பிரபாகரன் மற்றும் கரூர் தான்தோன்றிமலையை சேர்ந்த சாட்சி – 6 விஜயலட்சுமி எல்லாரும் எதிரி சின்னச்சாமி புகார்தாரருடைய நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து போட்டுள்ள கம்பி வேலியை எடுக்க சென்றபோது மேற்படி எதிரிகள் சின்னச்சாமி சுப்புராமன் அமுதா மூவரும் வந்து எப்படி நீங்க எங்க இடத்துக்குள்ள வரலாம் தேவுடியா மவன்களே தேவுடியா மகள்களே என்று அசிங்க அசிங்கமா பேசியதால் மரியாதையா பேசுங்கன்னு சொன்னதற்கு தேவையில்லாம பிரச்சனை செய்து வம்பிழுத்து 3–வது எதிரி அமுதா தான் மறைத்து வைத்திருந்த மிளகாய் பொடியை புகார்தாரர் மற்றும் சாட்சிகள் மீது வீசியும் 1–வது எதிரி சின்னச்சாமி பக்கத்துல கிடந்த உருட்டுகட்டையை எடுத்துக்கொண்டும் 2–வது எதிரி சுப்புராமன் இரும்பு கம்பியை எடுத்துக்கொண்டும் 1வது எதிரி சின்னச்சாமி சாட்சி –3 வாசுவை தலையிலும், சுப்புராமன் இடது கை புஜம் மற்றும் இடது முன் கையிலும் அடித்து சொற்பகாயத்தையும் சாட்சி –4 சிவக்குமாரை 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டுக்கட்டையால் தலையில் அடித்து சொற்பகாயத்தையும், 2–வது எதிரி சுப்புராமன் இரும்பு கம்பியால் சாட்சி –4 சிவக்குமாரை வலது முன் காலில் அடித்து கொடுங்காயத்தையும் சாட்சி –2 ராணியை 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டுகட்டையால் தலை மற்றும் இடது முன் கையில் அடித்து கொடுங்காயத்தையும் சாட்சி –6 விஜயலட்சுமியை 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டு கட்டையால் தலை இடது முன் கையிலும் அடித்து சொற்பகாயத்தையும் அதை தடுத்த சாட்சி –1 கார்த்திக்கை 2–வது எதிரி சுப்புராமன் இரும்பு கம்பியால் வலது கை மற்றும் இடது கையிலும் 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டு கட்டையால் தலையிலும் அடித்து சொற்பகாயத்தையும் சாட்சி –5 பிரபாகரனை 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டு கட்டையால் இடது கை புறத்திலும் 2–வது எதிரி சுப்புராமன் இரும்பு கம்பியால் தலையிலும் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் மூன்று எதிரிகள் சேர்ந்து கட்டை மற்றும் இரும்பு கம்பியை காண்பித்து சாட்சிகளை இன்னைக்கு தப்புச்சிட்டீங்க என்னைக்கா இருந்தாலும் எங்க கையால தான் உங்களுக்கு சாவுன்னு கொலை மிரட்டல் செய்துள்ளார்கள். எனவே எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 324, 506(ii), 326 IPC ன்

படி தண்டிக்கப்பட வேண்டியவராகிறார் என்று இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** லாலாபேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை 1 முதல் 3 எதிரிகளின் மீது கு.வி.மு.ச. பிரிவு 190(1)ன் படி வழக்கை கருத்தில் கொண்டு குற்ற சட்டப்பிரிவு 294(b), 324, 506(ii), 326 – இதசவின் கீழாக கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

**3)** 1 முதல் 3 எதிரிகள் முன்னிலையானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவப்பட்டது. பின்னிட்டு எதிரிகளின் மீது சட்டப்பிரிவு 294(b), 324, 506(ii), 326 இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரிகள் தங்கள் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

**4)** இந்த வழக்கில் பட்டியல் சாட்சி 1 முதல் 15 குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.19 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 7, 8, 9, 11, 12 மற்றும் 13 சாட்சிகள் விசாரிக்காமல் Dispence செய்யப்பட்டுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

5) <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து வெளிபடும் வழக்கு சங்கதிகள் சுருக்கம் பின்வருமாறு:</u>

**5.1)** அ.சா.1. கார்த்திக் புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடையே பாதை பிரச்சனை 10 வருடமாக இருந்து வருகிறது. எதிரிகள் அவர்களுடைய இடத்தில் பைப்லைன் போடுவதற்காக குழி பறித்தார்கள். அதில் அ.சா.1 போடக்கூடாது என்று தடுத்தார். அப்போது எங்களுக்குள் வாய்தகராறு ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அதில் அ.சா1. க்கும், அ.சா.1 ன் அம்மாவுக்கு, பெரியப்பபா, அ.சா.1 ன் அண்ணன்கள் சிவக்குமார் மற்றும் பிரபாகரன், விஜயலட்சுமி அ.சா.1 ன் அத்தை ஆகியோர்களுக்கு காயம்

ஏற்பட்டது. காயம் பட்ட நாங்கள் குளித்தலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு வந்த போலிசார் அ.சா.1 யிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

**5.2)** அ.சா.8 திரு.ஜி.ஆனந்தக்குமார் உதவி ஆய்வாளர் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் திரு.தங்கவேல் கையொப்பம் அ.சா.8 க்கு தெரியும். வழக்கை விரைந்து முடிக்க வேண்டி ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக கடந்த 03.12.2020 ம் தேதி தங்கவேல் நிலைய பொறுப்பில் இருந்தபோது குளித்தலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று உதவி ஆய்வாளர் தங்கவேல், உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கார்த்திக் என்பவரின் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றார் மதியம் சுமார் 23.30 மணிக்கு நிலைய குற்ற எண்.646/2020 இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

**5.3)** பின்னிட்டு 04.12.2023 ம் தேதி காலை 07.30 மணிக்கு சாட்சிகள் ராஜு, கோபிநாத் ஆகியோர்களை விசாரணை செய்து சம்பவயிடத்திற்கு சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்பு காயம்பட்ட கார்த்திக், ராணி, வாசு, சிவக்குமார், பிரபாகரன், விஜயலட்சுமி, ராஜா, உதயக்குமார், ராஜு, கோபிநாத் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். சிவக்குமாருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் ராய்வில்சன் ஆம்ஸ்ட்ராங், கார்த்திக் என்பவர்களை விசாரித்து விபத்து பதிவேடுகள், காயச்சான்றிதழ் பெற்றார். பின்னிட்டு ராணி, சிவக்குமார் ஆகியோர்களுக்கு கொடுங்காயம் என்று புலன் விசாரணையில் தெரிய வந்துள்ளதால் இந்த வழக்கின் சட்டப்பிரிவு 326 இதசவாக சேர்த்து சட்டப்பிரிவு மாறுதலுக்கு தயார் செய்து புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

**6)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) மற்றும் 351(1)(ஆ) இன் படி 16.06.2026 ஆம் தேதி வினவியபோது எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும், கூறினார்கள்.

**7)** இருதரப்பு கற்றறிருந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம், **அரசு தரப்பில் எதிரியின் மீது இதச பிரிவுகள்** 294(b), 324, 506(ii), 326 IPC ன் படி **சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா**? என்பதே ஆகும்.

**<u>8) தீர்வு.</u>**

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

வாதி தரப்பும், எதிரி தரப்பும் பங்காளிகள் ஆவார்கள். இருவருக்கும் ஏற்கனவே நிலம் பங்கு பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வருகிறது. இந்த நிலையில் எதிரிகள் குடும்பத்தார் புகார்தாரர் மற்றும் சாட்சிகளுக்கு சொந்தமான பாத்தியப்பட்ட நிலத்து வழியாக அவர்கள் வீட்டுக்கு சென்று வந்தார்கள். அது மட்டுமின்றி அந்த பாதைக்கு வேலி அமைத்து புகார்தாரர் நிலத்தை குழாய் அமைக்க வாணி பறித்தபொழுது புகார்தாரர் மற்றும் சாட்சிகள் சென்று எதுக்காக எங்க நிலத்தில் வாணி பறிக்கிறீங்க பறிக்க கூடாதுன்னு தேக்கியதால் எதிரி சின்னசாமி புகார்தாரர் வீட்டுக்கு போற பாதையை சீத்தமுள்ளை போட்டு அடைத்துவிட்டதால் 03.12.2020 ம் தேதி காலை 10.30 மணியளவில் புகார்தாரர் கார்த்திக் சாட்சி –2 ராணி, சாட்சி –3 வாசு, சாட்சி –4 சிவக்குமார், சாட்சி – 5 பிரபாகரன் மற்றும் கரூர் தான்தோன்றிமலையை சேர்ந்த சாட்சி – 6 விஜயலட்சுமி எல்லாரும் எதிரி சின்னச்சாமி புகார்தாரருடைய நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து போட்டுள்ள கம்பி வேலியை எடுக்க சென்றபோது மேற்படி எதிரிகள் சின்னச்சாமி சுப்புராமன் அமுதா மூவரும் வந்து எப்படி நீங்க எங்க இடத்துக்குள்ள வரலாம் தேவுடியா மவன்களே தேவுடியா மகள்களே என்று அசிங்க அசிங்கமா பேசியதால் மரியாதையா பேசுங்கன்னு சொன்னதற்கு தேவையில்லாம பிரச்சனை செய்து வம்பிழுத்து 3–வது எதிரி அமுதா தான் மறைத்து வைத்திருந்த மிளகாய் பொடியை புகார்தாரர் மற்றும் சாட்சிகள் மீது வீசியும் 1–வது எதிரி சின்னச்சாமி பக்கத்துல கிடந்த உருட்டுகட்டையை எடுத்துக்கொண்டும் 2–வது எதிரி சுப்புராமன் இரும்பு கம்பியை எடுத்துக்கொண்டும் 1வது எதிரி சின்னச்சாமி சாட்சி –3 வாசுவை தலையிலும், சுப்புராமன் இடது கை புஜம் மற்றும் இடது முன் கையிலும் அடித்து சொற்பகாயத்தையும் சாட்சி –4 சிவக்குமாரை 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டுக்கட்டையால் தலையில் அடித்து சொற்பகாயத்தையும், 2–வது எதிரி சுப்புராமன் இரும்பு கம்பியால் சாட்சி –4 சிவக்குமாரை வலது முன் காலில்

அடித்து கொடுங்காயத்தையும் சாட்சி –2 ராணியை 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டுகட்டையால் தலை மற்றும் இடது முன் கையில் அடித்து கொடுங்காயத்தையும் சாட்சி –6 விஜயலட்சுமியை 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டு கட்டையால் தலை இடது முன் கையிலும் அடித்து சொற்பகாயத்தையும் அதை தடுத்த சாட்சி –1 கார்த்திக்கை 2–வது எதிரி சுப்புராமன் இரும்பு கம்பியால் வலது கை மற்றும் இடது கையிலும் 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டு கட்டையால் தலையிலும் அடித்து சொற்பகாயத்தையும் சாட்சி –5 பிரபாகரனை 1–வது எதிரி சின்னச்சாமி உருட்டு கட்டையால் இடது கை புறத்திலும் 2–வது எதிரி சுப்புராமன் இரும்பு கம்பியால் தலையிலும் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் மூன்று எதிரிகள் சேர்ந்து கட்டை மற்றும் இரும்பு கம்பியை காண்பித்து சாட்சிகளை இன்னைக்கு தப்புச்சிட்டீங்க என்னைக்கா இருந்தாலும் எங்க கையால தான் உங்களுக்கு சாவுன்னு கொலை மிரட்டல் செய்துள்ளார்கள் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**9)** இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில், அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடையே பாதை பிரச்சனை 10 வருடமாக இருந்து வருகிறது என்றும், எதிரிகள் அவர்களுடைய இடத்தில் பைப்லைன் போடுவதற்காக குழி பறித்தார்கள் என்றும், அதில் அ.சா.1 போடக்கூடாது என்று தடுத்தார் என்றும், அப்போது எங்களுக்குள் வாய்தகராறு ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றும், அதில் அ.சா1. க்கும், அ.சா.1ன் அம்மாவுக்கு, பெரியப்பபா, அ.சா.1ன் அண்ணன்கள் சிவக்குமார் மற்றும் பிரபாகரன், விஜயலட்சுமி அ.சா.1ன் அத்தை ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும், காயம் பட்ட நாங்கள் குளித்தலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம் என்றும், அங்கு வந்த போலிசார் அ.சா.1 யிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று சாட்சியம் அளித்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**10)** புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 ஐ எதிரிகள் திட்டி, உருட்டு கட்டையாலும், கம்பியாலும் தாக்கி காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து, கொடுமை செய்ததாக சாட்சியம் அளிக்காததால் புகார் வாக்குமூலம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவுவதாக இல்லை.

**11)** அ.சா.2 ராணி, அ.சா.3 பிரபாகரன், அ.சா.4 சிவக்குமார், அ.சா.5

கோபிநாத், அ.சா.6 வாசு, அ.சா.7 விஜயலட்சுமி சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி சாட்சிகளிடம் நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பொழுதும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

12) அ.சா.8 திரு.ஆனந்தக்குமார் சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தில், காவல் உதவி ஆய்வாளர் திரு.தங்கவேல் அவர்கள் அ.சா.1 யிடம் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவயிடம் சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தும், விபத்து பதிவேடு, காயச்சான்றிதழ் தயார் செய்தது குறித்தும் சட்டப்பிரிவு மாறுதல் செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

13) அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மற்றும் அ.சா.ஆ.3 புகார் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும் போது கடந்த 03.12.2020 ம் தேதி காலை 10.30 மணிக்கு நிலைய குற்ற எண் 640/2020 இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC ன் படி புகார் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டதாக குறிப்பு எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் புகார் வாக்குமூலம் பெற்ற சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

14) அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது கடந்த 03.12.2020 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 08.12.2020 ம் தேதி நீதிபதியால் பெறப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இதன் மூலம் அ.சா.1 யிடம் பெற்ற புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

15) அ.சா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மற்றும் அ.சா.ஆ.5 பார்வை மகசர் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது சம்பவயிடமானது காவல் நிலையத்திலிருந்து சுமார் 06 கி.மீ வடகிழக்கில் அமைந்துள்ளது. சம்பவயிடமானது அந்தரப்பட்டி சின்னச்சாமி வீட்டிற்கு செல்லும் மண்பாதை அருகே நடந்ததாக எழுதப்பட்டு சாட்சிகள் கையொப்பமிட்டுள்ளார்கள். அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது புனவாசிப்பட்டி – பஞ்சப்பட்டி செல்லும் மண் பாதை

அருகே சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணங்கள் மூலம் சம்பவயிடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்று பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளர் என்பது தெரிய வருகிறது.

**16)** அ.சா.ஆ.19 சட்டபிரிவு மாறுதல் அறிக்கை மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும் போது ராணி, சிவக்குமார் ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதாலும், இதச பிரிவு 326 ஐ சேர்த்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

**17)** அ.சா.ஆ.7 சிவக்குமார் என்பவரின் குளித்தலை அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது மேற்படி ஆவணத்தில் 03.12.2020ம் தேதி பகல் 12.10 மணிக்கு சிவக்குமார் என்பவர் சிகிச்சைக்கு வந்ததாகவும் அந்தரப்பட்டி குடித்தெருவில் அடையாளம் தெரிந்த ஏழு நபர்கள் உருட்டுகட்டை, கம்பி வைத்து தாக்கினார் என்று மருத்துவரிடம் சொன்னதாக எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.8 சிவக்குமார் என்பவரின் காயச்சான்றிதழ் மேற்படி அறிக்கையில், 1. Lacuaton 4x1x1 cm in left 2. Abrasion 4x2 cm over right 3. swelling 15x10x5 cm (about) என்று குறிப்பிடப்பட்டுள்ளது எதிரிகள் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பு சாட்சியம் அளிக்காததால் மேற்படி, ஆவணம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

**18)** அ.சா.ஆ.9 கார்த்திக் என்பவரின் குளித்தலை அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது மேற்படி ஆவணத்தில் 03.12.2020ம் தேதி பகல் 12.45 மணிக்கு கார்த்திக் என்பவர் சிகிச்சைக்கு வந்ததாகவும் தனது வீட்டின் அருகில் அந்தரப்பட்டி குடித்தெருவில் அடையாளம் தெரிந்த ஏழு நபர்கள் உருட்டுகட்டை, இரும்பு கம்பி வைத்து தாக்கினார் என்று மருத்துவரிடம் சொன்னதாக எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.10 கார்த்திக் என்பவரின் காயச்சான்றிதழ் மேற்படி அறிக்கையில், 1. abration 6x2 cm in left parietal 2. swelling 4x3x2 cm in Right parietal 3. abration 4x1 cm in right elbow என்று குறிப்பிடப்பட்டுள்ளது எதிரிகள் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பு சாட்சியம் அளிக்காததால் மேற்படி, ஆவணம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

19) அ.சா.ஆ.11 விஜயலட்சுமி என்பவரின் குளித்தலை அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது மேற்படி ஆவணத்தில் 03.12.2020ம் தேதி பகல் 12.40 மணிக்கு விஜயலட்சுமி என்பவர் சிகிச்சைக்கு வந்ததாகவும் அந்தரப்பட்டி குடித்தெருவில் தனது வீட்டின் அருகில் உருட்டுகட்டை, இரும்பு ROD வைத்து அடையாளம் தெரிந்த ஏழு நபர் தாக்கினார் என்று மருத்துவரிடம் சொன்னதாக எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.12 விஜயலட்சுமி என்பவரின் காயச்சான்றிதழ் மேற்படி அறிக்கையில், 1.Lauration 5x0.5x1cm in left 2. swelling 5x3x2cm below the lauraion in left furearim என்று குறிப்பிடப்பட்டுள்ளது எதிரிகள் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பு சாட்சியம் அளிக்காததால் மேற்படி, ஆவணம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

20) அ.சா.ஆ.13 பிரபாகரன் என்பவரின் குளித்தலை அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது மேற்படி ஆவணத்தில் 03.12.2020ம் தேதி பகல் 01.00 மணிக்கு பிரபாகரன் என்பவர் சிகிச்சைக்கு வந்ததாகவும் தனது வீட்டின் அருகில் உருட்டுகட்டை, இரும்பு கம்பி வைத்து ஏழு அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்கினார்கள் என்று மருத்துவரிடம் சொன்னதாக எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.14 பிரபாகரன் என்பவரின் காயச்சான்றிதழ் மேற்படி அறிக்கையில், 1. abration 2x1 cm in left parietal Region என்று குறிப்பிடப்பட்டுள்ளது எதிரிகள் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பு சாட்சியம் அளிக்காததால் மேற்படி, ஆவணம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

21) அ.சா.ஆ.15 வாசு என்பவரின் குளித்தலை அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது மேற்படி ஆவணத்தில் 03.12.2020ம் தேதி பகல் 12.15 மணிக்கு வாசு என்பவர் சிகிச்சைக்கு வந்ததாகவும் அந்தரப்பட்டி குடித்தெருவில் அடையாளம் தெரிந்த ஏழு நபர்கள் உருட்டுகட்டை, கம்பி வைத்து தாக்கினார்கள் என்று மருத்துவரிடம் சொன்னதாக எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.16 வாசு என்பவரின் காயச்சான்றிதழ் மேற்படி அறிக்கையில், 1. Lacuraton 4x1x1 cm in parietal region of head 2. wound 1x0.5x1 cm in lefthand 3. swelling 10x6x3 cm (about) in left hand 4. abration 5x2 cm in left arm

என்று குறிப்பிடப்பட்டுள்ளது எதிரிகள் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பு சாட்சியம் அளிக்காததால் மேற்படி, ஆவணம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

**22)** அ.சா.ஆ.17 ராணி என்பவரின் குளித்தலை அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது மேற்படி ஆவணத்தில் 03.12.2020ம் தேதி பகல் 12.50 மணிக்கு ராணி என்பவர் சிகிச்சைக்கு வந்ததாகவும் அந்தரப்பட்டி குடித்தெருவில் தனது வீட்டின் அருகில் அடையாளம் தெரிந்த ஏழு நபர்கள் உருட்டுகட்டை, கம்பி வைத்து தாக்கினார்கள் என்று மருத்துவரிடம் சொன்னதாக எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.18 ராணி என்பவரின் காயச்சான்றிதழ் மேற்படி அறிக்கையில், 1. c/o headahe c/o pain in R wrist என்று குறிப்பிடப்பட்டுள்ளது எதிரிகள் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பு சாட்சியம் அளிக்காததால் மேற்படி, ஆவணம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

இறுதியில், 1 முதல் 3 எதிரிகளுக்கெதிரான இதச பிரிவு 294(b), 324, 506(ii), 326 IPC – ன் கீழான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து குவிமுச பிரிவு 248 (1) மற்றும் 271(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இரு தரப்பிலும் சொத்துக்கள் தாக்கல் செய்யவில்லை அதனால் சொத்து பற்றிய உத்தரவு பிறப்பிக்கவில்லை.

எதிரிகளின் பிணைமுறி மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு எதுவும் இல்லாத நிலையில் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 22 –ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.06.23 01:08:00 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கிருஷ்ணராயபுரம்.**

**<u>பின் இணைப்பு</u>**

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்</u>**

| **சாட்சிகளின் எண்ணிக்கை** | **சாட்சிகளின் பெயர்** | **விளக்கம்** |
|---|---|---|
| அ.சா.1 | கார்த்திக் | புகார்தாரர் |
| அ.சா.2 | ராணி | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.3 | பிரபாகரன் | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.4 | சிவக்குமார் | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.5 | கோபிநாத் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.6 | வாசு | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.7 | விஜயலட்சுமி | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.8 | திரு.ஜி.ஆனந்தக்குமார் | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>**

| **சான்றாவணங்களின் எண்ணிக்கை** | **தேதி** | **சான்றாவணம்** | **நிரூபித்தவர் /சான்றளித்தவர்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 08.12.2020 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 18.07.2022 | பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.3 | 08.12.2020 | புகார் | அ.சா.8 |
| அ.சா.ஆ.4 | 08.12.2020 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 |
| அ.சா.ஆ.5 | 18.07.2022 | பார்வை மகசர் | அ.சா.8 |
| அ.சா.ஆ.6 | 18.07.2022 | மாதிரி வரைபடம் | அ.சா.8 |
| அ.சா.ஆ.7 | 18.07.2022 | சிவக்குமார் என்பவரின் விபத்து பதிவேடு | அ.சா.8 |
| அ.சா.ஆ.8 | 18.07.2022 | சிவக்குமார் என்பவரின் காயச்சான்றிதழ் | அ.சா.8 |
| அ.சா.ஆ.9 | 18.07.2022 | கார்த்திக் என்பவரின் விபத்து பதிவேடு | அ.சா.8 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.10 | 18.07.2022 | கார்த்திக் என்பவரின் காயச்சான்றிதழ் | அ.சா.8 |
| அ.சா.ஆ.11 | 18.07.2022 | விஜயலட்சுமி என்பவரின் விபத்து பதிவேடு | அ.சா.8 |
| அ.சா.ஆ.12 | 18.07.2022 | விஜயலட்சுமி என்பவரின் காயச்சான்றிதழ் | அ.சா.8 |
| அ.சா.ஆ.13 | 18.07.2022 | பிரபாகரன் என்பவரின் விபத்து பதிவேடு | அ.சா.8 |
| அ.சா.ஆ.14 | 18.07.2022 | பிரபாகரன் என்பவரின் காயச்சான்றிதழ் | அ.சா.8 |
| அ.சா.ஆ.15 | 18.07.2022 | வாசு என்பவரின் விபத்து பதிவேடு | அ.சா.8 |
| அ.சா.ஆ.16 | 18.07.2022 | வாசு என்பவரின் காயச்சான்றிதழ் | அ.சா.8 |
| அ.சா.ஆ.17 | 18.07.2022 | ராணி என்பவரின் விபத்து பதிவேடு | அ.சா.8 |
| அ.சா.ஆ.18 | 18.07.2022 | ராணி என்பவரின் காயச்சான்றிதழ் | அ.சா.8 |
| அ.சா.ஆ.19 | 18.07.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.8 |

**எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:-இல்லை**

**எதிரிகள் தரப்பில் சான்று பொருட்கள் :- இல்லை**

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.06.23 01:08:06 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கிருஷ்ணராயபுரம்.**

**<u>பின்சேர்க்கை:</u>**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
3. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்:</u>**

மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.